**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

வேளாண்மை - 'மாநில வேளாண்மை மன்றம்' அமைத்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

---

**வேளாண்மை (வே.உ.1) துறை**

அரசாணை (நிலை) எண் 254 நாள் 29.7.1998

படிக்க:

வேளாண்மை இயக்குநரின் நேர்முக கடித எண் வேதவெ2/103327/98, நாள் 5.6.98.

- - - - -

அகில இந்திய அளவில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்களைப் பரிமாறிக்கொள்ளவும், அங்கீகாரமற்ற பட்டதாரிகளைத் தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கான வரன் முறைகளை வகுக்கவும், வேளாண் பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்ளவும், மருத்துவம், கால்நடை மருத்துவம் போன்று வேளாண்மையும் தொழில்நுட்பக் கல்வி என்ற அடிப்படையில் வேளாண் வல்லுநர்களைக் கொண்ட வேளாண்மை மன்றம் (Agricultural Council) ஒன்று அமைப்பது இன்றியமையாதது என்று அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்று இவற்றின் மீது வேளாண்மை இயக்குநரின் கருத்துக்கள் அரசால் பெறப்பட்டன.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துக்களை கவனமாகப் பரிசீலனை செய்து 'மாநில வேளாண்மை மன்றம்' ஒன்றினைஅமைக்க அரசு கொள்கை அளவில் ஏற்கிறது. எனவே இக்குழு அமைப்பது தொடர்பான முதல் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காகக் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு முதல் தர அடிப்படைக்குழுவை (Core Committee) ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

1. பிரசித்தி பெற்ற வேளாண் பட்டதாரி ஒருவர்

2. மேலே உள்ள தகுதியுடன் கூடிய வேளாண் துறையைச் சார்ந்த ஒருவர்.

3. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த துறைத்தலைவர் ஒருவர்.

4. அரசுத்துறையைச் சாராத - ஆனால் வேளாண் சம்பந்தப்பட்ட பணிகளில் திறமை மிகுந்த வேளாண்மை நிபுணர்கள் இருவர்.

3. பத்தி 2ல் குறிப்பிடப்பட்ட இக்குழு அமைப்பதற்கான ஆணை தனியே வெளியிடப்படும். மேலும் இக்குழு மாநில வேளாண்மை மன்றம் அமைப்பது குறித்து ஆராய்ந்து 'மாதிரி சட்ட முன்வடிவினை' **(Draft Bill)** 3 மாத காலத்திற்குள் அரசுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. ஆதிமூலம்

அரசு செயலாளர்

/ உண்மை நகல் /